**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.821/2022**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பாஸ்கரன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **செல்லையா** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(1,2 எதிரிகள் ஆஜர். 1,2 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(23.06.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் பெருங்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.செல்லபாண்டியன் என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் மாற்று பணியில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 19.10.2019ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.செல்லபாண்டியன் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது நடராஜன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 216/2019 பிரிவு 387 இதச படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 22.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று

சாட்சிகள் பெருமாள் மற்றும் கார்த்திக் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.7, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகும்.** பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 20.10.2019ம் தேதி காலை 5 மணிக்கு இவ்வழக்கில் சம்பந்தப்பட் எதிரிகள் முருகன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களை அருப்புக்கோட்டை ரோடு சந்திப்பில் வைத்து கைது செய்து சாட்சிகள் கருப்பசாமி, சதீஸ் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரிக்க எதிரி முருகன் காலை 5.15 மணிக்கு தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும் வாகனத்தில் பவுச்சில் ஒழித்து வைத்திருந்த அருவாளையும் அவரது சட்டைப் பையில் வைத்திருந்த பணம் ரூ.300/- அடையாளம் கோரி ஆஜர்படுத்தியுள்ளார். 1வது எதிரி கொடுத்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதனை அத்தாட்சியின் படி சார்பு ஆய்வாளர் மேற்படி 3 பொருட்களையும் கைப்பற்றியுள்ளார். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி அருவாள், மோட்டார் சைக்கிள் மற்றும் பணம் ரூ.300/- ஐ படிவம் 91 ன் மூலம் கைப்பற்றி நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ. 11 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. 1வது எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார்சைக்கிள், அருவாள் மற்றும் பணம் ரூ.300/-ஐ காண்பிக்கக்கூடிய புகைப்படங்கள் (எண்ணம் -3) **சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு ஆஜர் எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். பின்பு பட்டியல் சாட்சி 1 முதல் 3 வரையுள்ளவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 387 இதச வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார்

செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.